**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்,**
**போச்சம்பள்ளி , கிருஷ்ணகிரி மாவட்டம்**
**முன்னிலை – திரு. S.V. சண்முகநாதன், பி.காம்., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர், போச்சம்பள்ளி.**

2024 – ஆம் ஆண்டு ஜீலை மாதம் 15 ஆம் நாள் திங்கள்கிழமை

இ.ம.எண். 04 /2023
in
அ.வ. எண் 27/2013

**சகுந்தலா மற்றும் சிலர் .... மனுதாரர்கள்/பிரதிவாதிகள்**

**/எதிராக /**

**தண்டபாணி ....எதிர்மனுதாரர்/வாதி**

**இம்மனுவானது 17.03.2023 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு என் முன்பாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. A.பீமராஜ் அவர்களும்,எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. M.ஜெயபாலன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதம் கேட்கப்பட்டு, மனு, எதிருரை பரிசீலனை செய்யப்பட்டு இன்று இந்நீதிமன்றம் வழங்கும்**

**<u>உத்தரவு</u>**

**மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் தரப்பில் சட்டப்பிரிவு 151 உரிமையியல் நடைமுறைச்சட்டத்தின் கீழ் மேற்படி வழக்கில் வாதி தரப்பு 2ம் சாட்சியை மீண்டும் அழைத்து விசாரணை செய்ய வாதி தரப்பு சாட்சியத்தை Reopen செய்யக் கேட்டு மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

**<u>1. மனுவின் சுருக்கம்</u>**

**1. இம்மனுவில் 1ம் மனுதாரர். மேற்படி வழக்கில் 1 ஆம் பிரதிவாதியாவேன். மற்ற மனுதாரர்களுக்காக இந்த அபிடவிட்டை தாக்கல் செய்கிறேன். நான் போதிய படிப்பறிவில்லாதவள் ஆவேன்.**

2. வாதி மேற்படி பொய் வழக்கினை எங்களுக்கு எதிராக விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி தாக்கல் செய்துள்ளார். நான் எங்கள் தரப்பில் விரிவான எதிர் வழக்குரை தாக்கல் செய்துள்ளேன்.

3. மேற்படி வழக்கில் 29.01.2020 ஆம் தேதி வாதி தரப்பு 2 ஆம் சாட்சியின் (P.W.2 – சின்னசாமி த.பெ. வெங்கட்டப்ப நாயுடு) விசாரணை முடிக்கப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் P.W.2 ஐ மீண்டும் அழைத்து விசாரிக்க வேண்டியது அவசியமும் நியாயமும் ஆகிறது. மேலும் வாதி தரப்பு சாட்சியம் 22.02.2021 ம் தேதி முடித்து வைக்கப்பட்டுள்ளது.கொரொனா காரணமாக நீதிமன்றம் இயங்காத நிலையில் உடனே விசாரிக்க இயலவில்லை.

4. எனவே வாதி தரப்பு 2 ஆம் சாட்சியை (P.W.2) மீண்டும் அழைத்து (Recall) விசாரணை செய்ய வாதி தரப்பு சாட்சியத்தை Reopen செய்ய வேண்டியது மிகவும் நியாயமும் அவசியமும் ஆகிறது. இல்லையேல் எங்களுக்கு பெருத்த கஷ்ட நஷ்டங்கள் நேரிடும். எனவே கனம் கோட்டார் அவர்கள் தயவு செய்து மேற்படி வழக்கில் வாதி தரப்பு 2 ஆம் சாட்சியை (P.W.2) மீண்டும் அழைத்து (Recall) விசாரணை செய்ய வாதி தரப்பு சாட்சியத்தை Reopen செய்து நீதி செய்ய வேண்டுமாய் வணக்கமுடன் கேட்டுக்கொள்கிறேன் என மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>2. எதிர்மனுதாரர் வணக்கமுடன் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம்.</u>

1. மனுதாரர்களின் மனு வீணானது, சட்டப்படியும் நீதிப்படியும் நிலைக்கத்தக்கதல்ல, மாறாக தள்ளுபடி செய்யத்தக்கதாகும்.

2. இந்த எதிர் உரையில் குறிப்பாக ஒப்புக்கொண்டுள்ள சங்கதிகளை

தவிர ஏனையவற்றை மனுதாரர்களே நிரூபிக்க கடமைப்பட்டவர்கள் ஆவார்கள்.

3. மேற்படி வழக்கில் கடந்த 22.01.2021ம் தேதியில் வாதி தரப்பு சாட்சி 2 ன் விசாரணை முடிக்கப்பட்டது என்பது உண்மை. மேற்படி வழக்கில் PW.2 ன் வாதி பெயரில் ஏற்படுத்தியுள்ள கிரய ஆவணம் மற்றும் சில ஆவணங்களின் அடிப்படையில் PW.2ஐ மீண்டும் அழைத்து விசாரணை செய்யவேண்டியுள்ளது என்பது பொய் சங்கதியாகும். மேலும் கொரோனா நோய் தொற்று காரணத்தினால் கிரய ஆவணம் மற்றும் சில ஆவணங்களின் பேரில் குறுக்கு விசாரணை செய்ய இயலவில்லை என்பது சட்டப்படியும் நீதிப்படியும் ஏற்கக்கூடியதல்ல.

4. மேற்படி வா.சா.2 சாட்சியிடம் பிரதிவாதிகள் தரப்பில் முழுமையான வகையில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுவிட்டது. மேற்படி வாசா.2 குறுக்கு விசாரணை செய்யப்பட்டு இரண்டு வருடங்கள் கடந்து இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பிலான பி.சா.1 ஐ வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்த பிறகு அதற்கேற்றவாறு வாதி தரப்பு சாட்சிகளிடம் மீண்டும் குறுக்கு விசாரணை செய்ய பிரதிவாதிகள் கோருவது சாட்சிய சட்டத்திற்கு எதிரானது ஆகும். மேற்படி மனுதாரர்கள் காலம் தாழ்த்தி இம்மனுவை தாக்கல் செய்துள்ளனர். மேற்படி வழக்கில் கடந்த 22.01.2021 ம் தேதியில் முடிக்கப்பட்ட வா.சா.2ஐ குறுக்கு விசாரணையை தொடர வாதி தரப்பு சாட்சியத்தை மீண்டும் அழைத்து விசாரணை செய்ய வேண்டிய அவசியம் இல்லை. மேற்படி மனுதாரர்களின் மனு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல. எனவே மனுதாரர்களின் மனுவை தள்ளுபடி செய்து நீதி வழங்குமாறு கனம் நீதிமன்றத்தை எதிர்மனுதாரர் வணக்கமுடன் பிரார்த்திகிறார் என எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. தீர்வு**

இம்மனுவில் தீர்மாணிக்க வேண்டிய அம்சம் என்னவென்றால் மேற்படி மனுவானது அனுமதிக்கத்தக்கதா என்பதேயாகும்.

4. மனுதாரர்கள் தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தின் போது இவ்வழக்கில் வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ள சாட்சியை வா.சா.2 வாதி பெயரில் ஏற்படுத்தியுள்ள கிரய ஆவணம் மற்றும் சில ஆவணங்களின் அடிப்படையில் வா.சா.2 ஐ மீண்டும் அழைத்து விசாரணை ( Recall) செய்ய வாதி தரப்பு சாட்சியத்தை Reopen செய்யவேண்டும் என்றும், இவ்வழக்கில் 28.01.2020ம் தேதி வாதி தரப்பு சாட்சி 2ன் விசாரணை முடிக்கப்பட்டுள்ளது என்றும், கொரோனா காரணமாக நீதிமன்றம் இயங்கா நிலை ஏற்பட்டதால் உடனடியாக விசாரிக்கவில்லை என்றும் எனவே வாசா.2ஐ திரும்ப அழைத்து விசாரணை (Recall) செய்ய வாதி தரப்பு சாட்சியத்தை Reopen செய்து உத்தரவிட வேண்டும் என்று வாதிட்டார்.

5. எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தின் போது, இவ்வழக்கில் வாதி தரப்பு சாட்சியமானது முடிக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் பி.சா.1ஐ வாதி குறுக்கு விசாரணை செய்த பிறகு அதற்கேற்றவாறு வாதி தரப்பு சாட்சிகளிடம் மீண்டும் குறுக்கு விசாரணை செய்ய பிரதிவாதிகள் கோருவது சாட்சிய சட்டத்திற்கு எதிரானது ஆகும் என்றும் இம்மனுவை காலம் தாழ்த்தி தாக்கல் செய்துள்ளதாகவும், வா.சா.2ஐ குறுக்கு விசாரணை செய்ய வாதி தரப்பு சாட்சியத்தை Reopen செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்றும் எனவே இந்த மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று வாதிட்டார்.

6. மனுதாரர்கள் தரப்பில் வா.சா.2 ஐ குறுக்கு விசாரணை செய்வதற்காக வாதி தரப்பு சாட்சியத்தை Reopen செய்து உத்தரவிட

வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

7. எதிர்மனுதாரர் தரப்பில் வா.சா.2ஐ பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வாதி தரப்பு சாட்சியத்தை Reopen செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்று கூறப்பட்டுள்ளது.

8. மனுதாரர்கள் தரப்பில் வா.சா.2 ஐ குறுக்கு விசாரணை செய்வதற்காக வாதி தரப்பு சாட்சியத்தை Reopen செய்ய வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. மனுதாரர்கள் இவ்வழக்கில் பிரதிவாதிகள் ஆவார்கள். எதிர்மனுதாரர் இவ்வழக்கில் வாதி ஆவார். இம்மனுவில் ஏற்கனவே வாதிகள் தரப்பு சாட்சியம் விசாரிக்கப்பட்டு, வாதிகள் தரப்பு சாட்சியமானது 22.01.2021ம் தேதி முடிக்கப்பட்டுள்ளது. மேலும் மனுதாரர்கள் தரப்பில் வா.சா.2ஐ குறுக்கு விசாரணை செய்வதற்காக இம்மனுவோடு சேர்த்து இடைக்கால மனு எண்.05/2023 கட்டளை 18 விதி 17ன் கீழ் தாக்கல் செய்துள்ளார்கள். இம்மனுவில் வாதிகள் தரப்பில் வேறு புதிய சாட்சிகளையோ அல்லது ஏற்கனவே விசாரிக்கப்பட்ட சாட்சிகளையோ விசாரணை செய்ய பரிகாரம் கோரப்படவில்லை. வாதிகள் தரப்பில் சாட்சிகள் விசாரணை செய்ய அனுமதி கேட்காத பட்சத்தில் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்காக வாதிகள் தரப்பு சாட்சியத்தை Reopen செய்ய வேண்டிய அவசியம் இல்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது. வாதிகள் தரப்பு சாட்சியத்தை Reopen செய்யாமலேயே வா.சா.2ஐ விசாரணை செய்ய (Recall) பரிகாரம் கேட்க மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு உரிமை உள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே வா.சா.2ஐ விசாரணை செய்வதற்காக (Recall) வாதி தரப்பு சாட்சியத்தை Reopen செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**இறுதியாக இம்மனுவானது தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.**

**என்னால் சொல்லப்பட்டதை, சுருக்கெழுத்து தட்டச்சரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2024 –ம் ஆண்டு ஜீலை மாதம் 15–ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.**

SHANMUGANATHAN

District Munsif cum Judicial Magistrate
Digitally signed by SHANMUGANATHAN
Location: Pochampalli

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர், போச்சம்பள்ளி.**